007 ஜேம்ஸ் பாண்ட்
துப்பறியும்
கப்பலை காணோம்
&
தங்கப் புதையல்

ஜேம்ஸ்பாண்ட் நீண்டநாளாக வேலையில்லாமல் வீட்டில் இருந்தார்.
உஸ்...
வீட்டில் சும்மாவே இருப்பது ஒரே போர்! அதுதான் தலையை வலிப்பது போலிருக்கிறது! எப்போது எனக்கு அழைப்பு வருமோ?
அப்பொழுது தொலைபேசி ஒலித்தது!
அந்த போனா? அலுவலகத்தில் இருந்து அழைப்பு!
ஜெனரலாகத்தான் இருக்கும். அவர்தான் இந்நேரம் அழைப்பார்!
ஜேம்ஸ்பாண்ட் உடனே அலுவலகத்துக்குக் கிளம்பினார்.
எனக்கு உடம்பே சரியில்லை. இவர்வேறு உடனே வரச்சொல்லுகிறார்.
அவசரம் ஒன்றுமில்லை. சும்மாதான் அழைத்தேன்!
இவருக்கும் வேறுவேலை இல்லை போலிருக்கிறது!

உன் உடம்பு இப்பொழுது எப்படியிருக்கிறது, ஜேம்ஸ்?
பரவாயில்லை.
நேற்று டாக்டரிடம் போயிருந்தாயே, அவரது அறிக்கை வந்துவிட்டது.
படிக்கிறேன், கேள்.
இவரது உடல்நலம் நன்றாகத்தான் இருக்கிறது. மனநலந்தான் சரியில்லை. வேலையில்லாததே இதற்குக் காரணம்.
வேலையில்லாததால், நாள்தோறும் 60 சிகரெட்டு குடிக்கிறார்.
நிறையக் குடிக்கவும் செய்கிறார். இதனால் இரத்த அழுத்தம் அதிகமாகிவிட்டது.
தலைவலிக்கிறது என்கிறார். அதற்குக் காரணம் சும்மா இருப்பதுதான்.
ஆமாம், எனக்கு வேலை வேண்டும்.

இயற்கை சூழலில் இரண்டு மூன்று வாரம் இருப்பது நல்லது என்று டாக்டர் சிபாரிசு செய்திருக்கிறார்.
ஏதாவது ஒரு தீவுக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளேன், ஜேம்ஸ்.
அது எனக்கு ஓய்வாக இருக்காது. தனிமை என்னைக் கொன்றுவிடும்.
எனக்குத் தேவை ஆக்ஷன்!
இப்பொழுது உனக்குத் தேவை, வைத்தியந்தான்.
உடல்நலம் இல்லாத ஒருவரை 007 ஆக எப்படி எங்கேயும் அனுப்ப முடியும்?
எனக்குத் தெரிந்த ஓர் இயற்கை வைத்தியர் இருக்கிறார். அவர்தான் உனக்கு ஏற்றவர் என்று நினைக்கிறேன்.
அவரைப் போய்ப் பாரேன், ஜேம்ஸ். உடனே உன் தலைவலி தீரும்.
எனக்கு வைத்தியம் வேண்டியது இல்லை, சார்.

எனக்கு ஏதாவது வேலை வேண்டும். அதுதான் என்னை சுறுசுறுப்பு உள்ளவன் ஆக்கும்.
டாக்டரின் அறிக்கை வந்ததுமே, என் செயலாளர் உனக்கு அங்கே இடம் ரிசர்வ் செய்துவிட்டார். நீங்கள் உடனே அங்கே போங்கள்.
எங்கே சார்?
மாயாத் தீவுக்கு. அது இயற்கை எழில் நிறைந்த இடம். அங்கே லிங்காங் என்பவர் இயற்கை வைத்தியசாலை நடத்துகிறார். காய்கறி, கீரைகள், பழங்கள்தான் அவரது மருந்துகள்.
சார், எனக்கு இந்த வைத்தியம் வேண்டுமா? ஏதாவது வேலை கொடுங்கள்!
உங்கள் உடல்நலம் தேறியபின்புதான் வேலை. உடனே கிளம்புங்கள்.

மாயாத் தீவு அழகான இடம். அங்கே போனால் அதன் அழகு உன்னைக் கொள்ளை கொன்று விடும்.
ஜேம்ஸ்பாண்ட் வேண்டா வெறுப்பாக வெளியில் வந்தார். செயலாளரை சந்தித்தார்.
மேரி! ஜெனரலுக்கு என்ன வந்து விட்டது?
இயற்கை வைத்தியம், அது இது என்கிறார்.
என்னை உடனே வரச்சொன்னார். வேலை கிடைத்தது என்று ஓடி வந்தேன்.
ஜெனரல் என்ன சொன்னார்?
இயற்கை வைத்தியமாம். மாயாத் தீவுக்குப் போக வேண்டுமாம்.
ஆமாம். உங்களுக்கு அங்கே இடம்கூட ரிசர்வ் செய்துவிட்டேன்!
ஜேம்ஸ்! நீங்கள் நிறையக் குடிக்கிறீர்கள்! சிகரெட்டும் ஏராளம்! இந்த இயற்கை வைந்தியந்தான் உங்களை பலசாலி ஆக்கும்.
என் பலத்துக்கு என்ன கேடு? உன்னைத் தூக்கிப் பந்தாடட்டுமா?

ஆனால், உங்கள் வேலை அது அல்லவே! வேலைக்கு ஏற்ப உடல் பலம் வேண்டாமா?
ப்பூ!
ஜேம்ஸ்பாண்ட் நியூயார்க் வந்து சேர்ந்தார். ஒரு டாக்சி டிரைவரை அழைத்தார்.
மாயாத் தீவு எங்கே இருக்கிறது?
வண்டியில் ஏறுங்கள். அழைத்துப் போகிறேன்.
ஒருமணி நேரப் பயணத்துக்குப் பிறகு
TAXI
அதோ பாருங்கள், அந்தத் தீவுதான். படகில் போகவேண்டும்.
ஜேம்ஸ்பாண்ட் தீவுக்கு வந்தார்.
புகை பிடிக்காதீர் இந்தத் தீவில் யாரும் புகை பிடிக்கக் கூடாது
அடக் கடவுளே!
ஜேம்ஸ்பாண்ட் இயற்கை மருத்துவமனையை அடைந்தார். டாக்டர் இங்காங்கை சந்தித்தார்.
சோதனை அறைக்குள் வாருங்கள்.

உடல் பரிசோதனை நடந்தது.
நிறையக் குடித்து உடலைக் கெடுத்துக் கொண்டீர்கள்.
உங்களுக்கு இயற்கை வைத்தியந்தான் நல்ல பலன் அளிக்கும்.
டாக்டரின் அறைக்குத் திரும்பினார்கள்.
கவலைப்படாதீர்கள். இரண்டே வாரத்தில் குணம் அடைந்துவிடுவீர்கள். இன்றைக்கே சிகிச்சையைத் தொடங்கி விடலாம்.
அன்று மாலை சிகிச்சை தொடங்கியது. சிகிச்சை பெறும் ஒருவரை ஜேம்ஸ்பாண்ட் பார்த்தார்.
அந்த ஆளை வெந்நீரில் போட்டு அவிக்கிறார்கள்?
ஜேம்ஸ், இப்படி வாருங்கள்!
ஜேம்ஸுக்கும் வெந்நீர் சிகிச்சை அளிக்கப்பட்டது.
இது சுகமாகத்தான் இருக்கிறது!
டாக்டர்! நான் உள்ளே வரலாமா?
திருட்டுவிழி! இவன் யாராக இருக்கும்?

ஜேம்ஸ்பாண்ட்டுக்கு சிகிச்சை தொடர்ந்தது.
கடிகாரத்தைக் கழற்றுங்கள்.
ஊகூம்! நான் கடிகாரத்தைக் கழற்றுவதே இல்லை!
இரத்த ஓட்டத்தை கடிகாரம் தடை செய்யும்.
அப்படியானால், கழற்றி விடுங்கள்!
அவன் கையில் ஒரு பச்சை இருப்பதை ஜேம்ஸ் பார்த்தார்.
பச்சையை மறைக்கத்தான் கடிகாரத்தைக் கழற்ற மறுத்தானா? அது என்ன அடையாளம்?
உடனே அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்!
ஜேம்ஸ் சிகிச்சை முடிந்து வந்தார்.
அலுவலகத்தில் நிச்சயம் குறிப்பு இருக்கும்!
தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.
அலோ! நான் ஜேம்ஸ்பாண்ட் பேசுகிறேன். இங்கே சிகிச்சை பெறும் ஒருவர் கையில் ஒரு விசித்திர பச்சை இருக்கிறது...

மணிக் கட்டில்... இரு பறவைகள் பறப்பதுபோல... இரண்டையும் இணைத்து ஒரு நேர்கோடுகள்...
பதில் கிடைக்கப் பத்து நிமிடம் ஆயிற்று.
அது பறவை அல்ல. தீ நாக்கு.
பதில் ஜேம்ஸ்பாண்ட்டை திடுக்கிட வைத்தது.
ஒரு கொள்ளைக் கூட்டத்தின் அடையாளம், அது.
அவர்களின் தலைமை நிலையம் பாரிசில் இருக்கிறது. இவன் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனாகத்தான் இருப்பான்.
தங்கம், கஞ்சா, ஆயுதங்களை கடத்துவதிலும் இக்கூட்டம் ஈடுபட்டு இருக்கிறது.
இவனை இன்னும் நான் குறிவைக்கவில்லை. ஏதாவது தகவல் கிடைத்தால் உடனே தெரிவிக்கிறேன்!
கொள்ளைக் காரன் இங்கே ஏன் வரவேண்டும்? என்னைப்போல சிகிச்சை பெறவா? அல்லது...!

நான் போனில் பேசியதை அவன் கேட்டு இருப்பானோ?
முட்டாள் தனம் பண்ணி விட்டேன்!
ஜேம்ஸ்பாண்டுக்கு இரண்டு நாளாக வெந்நீர் சிகிச்சை தொடர்ந்து நடந்தது.
இன்றுமுதல் காற்று அழுத்த சிகிச்சை நடக்கும்.
அழைத்துப்போக நர்சு வந்தாள்.
காற்று அழுத்த சிகிச்சை என்றால் என்ன?
உடலைக் காற்று அழுத்தும். பிடித்துவிட்டது போலிருக்கும்.
சிகிச்சை அறைக்கு வந்தார்கள்.
படுத்துக் கொள்ளுங்கள்.
உடலைப் பிடித்துவிட எந்திரம் எதற்கு? நீயே பிடித்துவிடலாமே!
எந்திரம் எப்படி வேலை செய்கிறது என்பதை நர்சு விளக்கினாள்.
உடல் முழுக்க ஒரே சீராகப் பிடித்துவிட்டது போல இருக்கும். அந்த சுகத்தில் சிலர் தூங்கி விடுவார்கள்.
சரி, தொடங்கு.
90 பவுண்டு அழுத்தந்தான் வைத்திருக்கிறேன். போதும் அல்லவா? 15 நிமிடத்தில் நான் திரும்பி வருகிறேன்.

ஐந்து நிமிடம் கழித்து...
என் விவகாரத்தில் இனி நீ தலையிடவே முடியாது.
ஆ! அவன்! ஆ...!
கொள்ளைக்காரன் லிப்பி காற்று அழுத்தத்தை 200 பவுண்டுக்கு ஏற்றினான்.
நிறுத்து! என் மீது மலையைத் தூக்கி வைத்ததுபோல இருக்கிறது!
நசுங்கி, சிதைந்து போ!
ஜேம்ஸ்பாண்ட் வலி தாளாமல் துடித்தார்.
ஆ......
அலறல் கேட்டு, டாக்டரும் நர்சும் ஓடிவந்தார்கள்.
என்ன... என்ன...
எந்திரத்தை நிறுத்துங்கள்!
எந்திரம் நிறுத்தப்பட்டது.
எப்படி திடீர் என்று 200 பவுண்டு ஏறிற்று?
நான்தான் தவறுதலாகக் கட்டிலில் இருக்கும் கண்ட்ரோல் சுவிட்சை அழுத்திவிட்டேன்.

வேண்டாம்! வேண்டாம்!!
உன்னை நீயே கொல்லப் பார்த்தாயே! படு, சரியான அழுத்தத்தில் வைக்கிறேன்!
ஜேம்ஸ்பாண்ட் மிகவும் வேதனைப் பட்டதால், மது அருந்த அனுமதிக்கப் பட்டார். தீவின் மறுகோடியில் மதுக்கடை இருந்தது.
நான் பிழைத்ததே மறுபிழைப்பு தான்!
ஒரு பொடிப்பயல் என்னை தூள்பறக்க வைத்துவிட்டானே!
இப்போது தலைமை நிலையத்துக்கு ஒன்றும் சொல்லக்கூடாது. லிப்பியின் இரகசியங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.
லிப்பியின் நடவடிக்கைகளை ஜேம்ஸ்பாண்ட் கண்காணிக்கத் தொடங்கினார்.
அவனைப் பார்த்தால் நோயாளி போல இல்லையே!
அவர் உடம்புக்கு என்ன?

உடம்பைக் குறைக்க விரும்புகிறார். அதற்காக நாள்தோறும் ஆவியில் குளிக்கிறார்.
அப்படியா?
இரண்டு வாரம் ஆயிற்று. இன்றுடன் ஜேம்ஸ் பாண்டுக்கு சிகிச்சை முடிகிறது.
ஆவி குளியலுக்கு வந்திருக்கிறானா?
ஆவி நன்கு சூடாக இருக்கட்டும். நான் இன்னும் மூன்று பவுண்டு குறைய வேண்டும்.
அப்படியே செய்கிறேன்.
ஜேம்சுக்கு சிகிச்சை முடிந்தது.
டாக்டர், நான் அறைக்குப் போகிறேன்.
ஓ.கே.!
விப்பி இங்கேதானே ஆவி பிடிக்கிறான்?
என்ன, உன் சிகிச்சை முடிந்துவிட்டதா?
ஆமாம். இன்று உனக்கு மிகச் சூடாக ஆவி வேண்டும் என்று கேட்டாய் அல்லவா?

ஆமாம். அதுக்கு என்ன?
இருநூறு பவுண்டு காற்று அழுத்தம் வைத்து என்னைக் கொலை செய்ய முயற்சித்தாய் அல்லவா?
ஜேம்ஸ் ஆவி எந்திரத்தை நெருங்கினார்.
200 டிகிரி ஹீட் வைத்தால் நீ அவிந்து போவாய். 180 டிகிரி வைக்கிறேன்! உனக்கு இதுவே சரியான தண்டனை.
அரைமணி நேரத்தில் நீ வெந்து போவாய்! உனக்கு ஆயிரம் பவுண்டு அழுத்தம் வைத்திருக்க வேண்டும்.
ஏய்... எந்திரத்தை நிறுத்து!
முடியாது!
சிகிச்சை அறையில் இருந்து ஜேம்ஸ்பாண்ட் வெளியேறினார்.
இவனை இப்படியே விட்டுவிட்டு நான் வெளியேறுவது சரியா?
என் சிகிச்சை காலம் முடிந்து விட்டதே. நான் வெளியேறித்தான் ஆகவேண்டும்.


ஜேம்ஸ்பாண்ட் தன்னை அறியாமலே மிகப்பெரிய சதி ஒன்றை முறியடித்துவிட்டார்! அமெரிக்கா முழுவதையுமே குலுக்குவதாக அந்த சதி இருந்தது!!
பாரிசு நகருக்கு வெளியில் ஒரு மாளிகை. அதுதான் தீ நாக்குக் கூட்டத்தின் தலைமை நிலையம்.
லிப்பி ஆவியில் வெந்த இரண்டு நாளில் தீ நாக்குக் கூட்டம் அங்கு ஓடியது- இது சாதாரணக் கொள்ளைக்கூட்டம் அல்லஇதில் உள்ள ஒவ்வொருவரும் மிகவும் கைதேர்ந்தவர்கள்.
தலைவன் மாரிஸ் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.
தலைவன் மாரிஸ் சாதாரண ஆள் அல்ல.முன்னாள் இராணுவ தளபதி திட்டமிட்டு செயல்படுவதில் இல்லாடி. கூட்டத்தில் மாரிஸ் பேசினான்:
மிகப்பெரிய புதிய திட்டம் ஒன்றை அறிவிக்கவே உங்கள் எல்லாரையும் இங்கே அழைத்திருக்கிறேன்!

இதுவரை சின்னச் சின்ன கடத்தல் வேலைகளில்தான் நாம் ஈடுபட்டு இருந்தோம்.
இந்தப் புதிய திட்டம் நிறைவேறினால் நாம் அனைவரும் ஒரே நாளில் கோடீசுவரர் ஆகிவிடுவோம்!
அந்தத் திட்டத்தைச் சொல்லுமுன், வேறு ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நமது இரகசியங்கள் வெளியே போகாமல் இருக்க இது முக்கியம்.
போனமாதம் ஒரு கோடீசுவரரின் மகளை நாம் கடத்தினோம். குமரிப்பெண்ணான அவளுக்கு பத்து இலட்சம் டாலர் விலை வைத்தோம்.
கோடீசுவரர் அந்தப் பணத்தைக் கொடுத்து, அவளை மீட்டுப் போனார். ஆனால், அந்தப் பெண் நம்மிடம் இருந்த குறைந்த நாளைக்குள் நம்மில் ஒருவன் அவள் மீது காதல் கொண்டு விட்டான்.
அவளை இப்பொழுதும் சந்திக்கப் போகிறான். இது நம் கூட்டத்துக்கே ஆபத்து அல்லவா?
அவனை தண்டிக்க வேண்டாமா? கத்திரி, எழுந்து நில்!

கத்திரி அச்சத்துடன் எழுந்து நின்றான்.
நான்... நானா...
மேசைக்கு அடியில் இருந்த ஒரு பொத்தானை மாரிஸ் அழுத்த...
உடனே...
ஆ...!
மின்சாரம் பாய்ச்சப்பட்ட கத்திரி. உடனே கருகி விழுந்தான்.
நமது கட்டுப்பாட்டை மீறும் யாருக்கும் இதுதான் முடிவு. உட்காருங்கள்.
புதிய திட்டத்தை நிறைவேற்ற கட்டுப்பாடு மிக முக்கியம். இல்லாவிட்டால், வெற்றிபெற முடியாது.
இப்பொழுது புதிய திட்டத்தின் விவரங்களைச் சொல்லுகிறேன்.

ஓர் அமெரிக்க இராணுவ விமானத்தைக் கைப்பற்றுவதுதான் நமது புதிய திட்டம்.
அது சாதாரண விமானம் அல்ல. இரண்டு அணுகுண்டு களை ஏற்றிச் செல்லும் விமானம்.
நூறு கோடி டாலருக்குத் தங்கக் கட்டிகள் கொடுத்தால் தான் விமானம் திருப்பித் தரப்படும் என்று அமெரிக்க அரசுக்கு அறிவிக்கப் படும்.
நூறு கோடி டாலர் தங்கம் கொடுக்க அமெரிக்க அரசு மறுத்தால்...
மக்கள் நடமாட்டம் நிறைந்த நகரங்கள் மீது அணுகுண்டுகளை வீசுவோம் என்று எச்சரிக்கை விடுவோம்!

விமானத்தைக் கடத்திப் போக, இத்தாலிய விமான தளபதி ஒருவருடன் ஒப்பந்தம் செய்திருக்கிறோம்.
பெட்டாச்சி என்ற அந்தத் தளபதி, இத்தகைய விமானங்களில் பயிற்சி பெற நியூயார்க் போயிருக்கிறார்.
அவர் இப்பொழுது நமது ஆணையை எதிர்த்து நியூயார்க் விமான நிலையத்தில் காத்திருக்கிறார். அங்குதான் இந்த விமானமும் நிற்கிறது.
இத்திட்டத்தை நிறைவேற்ற நம்முடைய ஆளான விப்பி நியூயார்க் அருகில் ஒரு தீவில் தயாராக இருக்கிறான்.
ஆனால், விப்பி வேறு ஒரு நோயாளியுடன் சண்டை போட்டுக் கொண்டு, ஆவியில் வெந்து போனான்
இப்பொழுது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருக்கிறான்.

விமானத்தைக் கைப்பற்றியதும், நமது எச்சரிக்கைக் கடிதத்தை அமெரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பும் பொறுப்பு விப்பியிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.
அவன் மருத்துவமனையில் இருப்பதால், நமது திட்டத்தை செயல் படுத்துவது ஒரு வாரம் தாமதம் ஆகும்.
இதற்குக் காரணமான விப்பியை சும்மா விடலாமா?
விப்பிக்குத் தகுந்த தண்டனை அளிக்கப் படும்.
விமானம் கடத்தப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பப்பட்டதும்; விப்பி தீர்த்துக்கட்டப்படுவான்! இதற்கு டைகர் பொறுப்பு ஏற்க வேண்டும்.
ஆளை தீர்த்துக் கட்டி விடுகிறேன்!

தங்கக் கட்டிகள் நம் கைக்கு எப்படி வந்து சேரும்?
அதையும் சொல்லு கிறேன்.
ஈட்டன் மலை அடிவாரத்தில் தங்கக் கட்டிகளை இறக்க வேண்டும்.
அதை எப்படி நாம் எடுப்போம்?
சொல்லு கிறேன்.
விமானத்தில் கொண்டு வந்து, பாராசூட் மூலம் இறக்குவார்கள்.
அதற்காக ஒருவரை நியமித்து இருக்கிறேன். அவருக்கு 10 இலட்சம் டாலர் தருவதாகச் சொல்லியிருக்கிறேன்.
பாராசூட்டில் இறங்கும் தங்கக் கட்டிகளை அவர் சேகரித்து, ஒரு லாரியில் ஏற்றுவார்.

சற்று தூரத்தில் உள்ள துறைமுகத்தில் அவருக்காக ஒரு கப்பல் காத்துக்கொண்டிருக்கும். அதில் தங்கக் கட்டிகளை ஏற்றுவார். அந்தக் கப்பல் கோவாவுக்குப் போகும். அங்கு தங்கக் கட்டிகள் வேறு ஒரு கப்பலுக்கு மாற்றப்பட்டு, அரேபியா செல்லும்.
அங்கு தங்கக் கட்டிகள் விற்கப்படும். அந்தப் பணம் சுவிஸ் பாங்கில் இரகசிய கணக்கில் செலுத் தப்படும்.
சூயஸ்
இந்தியா
கோவா
இந்தியக் கடல்
நாம் பணத்தை எடுத்து பங்கிட்டுக் கொள்ளலாம்.
நூறு கோடி ரூபாய்! சாதாரணமானது அல்ல! அதற்காக எவ்வளவு பாடுபட வேண்டும் தெரியுமா?
விமானத்தில் கைப்பற்றப்படும் அணுகுண்டுகள், உடனே ஒரு நீர்மூழ்கிக் கப்பலுக்கு மாற்றப்படும்.
அட்லாண்டிக் மாகடல்
ஜாக்சன்வில்லா
கனவரல்!
புளோரிடா
மியாமி
மெக்சிகோ
பாமாஸ்
அந்தக் கப்பலின் பயணம் இரகசியமாக இருக்கும்.

அணுகுண்டுகளைக் கப்பலில் ஏற்றுவதுடன் விமானியின் வேலை முடிந்துவிடும்.
பிறகு கப்பல் பயணம். இதுவும் மிக இரகசியமாக நடக்கும். யாராலும் கப்பலைக் கண்டுபிடிக்க முடியாது.
ஒரு தீவில் அணுகுண்டுகள் மறைந்து வைக்கப்படும். அந்தத் தகவல் வந்தபின்பு தான் அமெரிக்க ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்புவோம்.
நமது கோரிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி சம்மதிக்கா விட்டால்...
ஒரு அணுகுண்டை எடுத்து வருவோம்.
ஒரு நகரத்தின் மீது அணுகுண்டு வீசப்படும். அது கண்டு ஜனாதிபதி அலறிவிடுவார்!
நாம் எல்லாரும் எச்சரிக்கையாக செயல்பட்டால்தான் வெற்றி பெற முடியும். உடனே செயலில் இறங்குங்கள்.

நியூயார்க் விமான நிலையம்.
இங்குதான் அணுகுண்டுகளுடன் ஒரு விமானம் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது.
அவசரத் தேவைக்கு உடனே புறப்படுவதற்காக.
இத்தாலிய விமான தளபதி பெட்டாச்சி அணுகுண்டு விமானத்தில் பயிற்சி பெற இங்கு வந்திருந்தான்.
எனக்கு பத்து இலட்சம் டாலர் கிடைக்கும்! என் வாழ்நாளில் என்றைக்காவது இவ்வளவு பெரிய தொகையைக் கண்ணால் பார்க்க முடியுமா?
பயிற்சியின் இறுதிக் கட்டம்.
இதோ வருகிறேன்.
பெட்டாச்சி! புறப்படலாமா?
கூட வரும் விமானிகளைக் கொல்ல, பெட்டாச்சி சயனைடு விஷ வாயுக் குழாய் ஒன்றைத் தயாராக வைத்திருந்தான்!
குழாயைத் திறந்தால் போதும், ஆள் காலி!

விமானம் கிளம்புமுன் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று விமானி சோதித்தார். பெட்டாச்சி அருகில் இருந்தான்.
விமானம் பறந்தது.
இன்னும் பத்தே நிமிடத்தில் வேலை முடிந்துவிடும்.
பெட்டாச்சி! நாம் இப்பொழுது எட்டாயிரம் அடி உயரத்தில் பறக்கிறோம்!
யார் கண்ணுக்கும் தெரியாத உயரம்.
விமானம் வெகு வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. பெட்டாச்சி தனது கைக்கடிகாரத்தை பத்தாவது முறை பார்த்துக்கொண்டான்!
நேரமாகிவிட்டது!
விஷ வாயு தன்னைத் தாக்காதபடி பெட்டாச்சி முகமூடி அணிந்து கொண்டான்.
பெட்டாச்சி, எதுக்கு முகமூடி?
சும்மாதான்... எப்படியிருக்கிறது என்று போட்டுப் பார்த்தேன்!

இனி ஆட்டோமேட்டிக் பைலட் போட்டுவிடலாமே?
ஆமாம். நாம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.
விஷவாயுக் குழாயை பெட்டாச்சி மெல்லத் திறந்துவிட்டான்!
மலை அடிவாரமும் வந்துவிட்டதே!
பெட்டாச்சி ஓய்வு எடுப்பதாகச் சொல்லி, பின்பக்கம் வந்துவிட் டான். முகமூடியையும் சரி செய்துகொண்டான்.
விஷ வாயு என்னைத் தாக்கிவிடக் கூடாதே!
பிராண வாயுக் குழாயை எடுத்து மாட்டிக்கொண்டான்.
சயனைட் வாயு ஆளை ஐந்து நிமிடத்தில் கொல்லும் என்பார்களே...

சயனைட் விஷ வாயு பரவிக்கொண்டு இருந்தது
நாலு நிமிடம் ஆகிவிட்டது. அடுத்த நிமிடத்தில்...
எனக்குப் பத்து இலட்சம் டாலர்! நான் இலட்சாதிபதியாகி விடுவேன்!!
சயனைட் விஷக் குழாய்க்கு அருகில் இருந்த விமானி முதலில் பலியானார்.
மற்ற விமானிகளையும் விஷம் தாக்கியது.
இன்னும் இரண்டு பேர்தான் பாக்கி!

விமானிகளும் மூச்சுத் திணறி அவதிப் பட்டார்கள்...
சதி...
பயங்கர சதி...
எல்லாம் முடிந்தது. என் வேலையைத் தொடங்க வேண்டியதுதான்.
பெட்டாச்சி எச்சரிக்கையுடன் விஷக் குழாயை மூடினான்.
விஷ வாயு வெளியேற சன்னலைத் திறந்து வைத்தான்.
ஆட்டோமேட்டிக் பைலட் நன்றாக வேலை செய்கிறது. நான் என் வேலையைப் பார்க்கலாம்.

பெட்டாச்சி 15 நிமிடம் காத்திருந்தான்.
விஷ வாயு முழுவதும் வெளியேறி விட்டது.
இவர்களை தூக்கிப் போடக் கூட இங்கே இடம் இல்லையே.
32 ஆயிரம் அடி உயரத்தில் இப்பொழுது விமானம் பறக்கிறது. ராடார் கூடக் கண்டுபிடிக்க முடியாது.
காண்டர்
பாஸ்டன்
நியூயார்க்
அட்லாண்டிக் மாகடல்
பாமாஸ்
திரும்ப வேண்டிய இடம் வந்துவிட்டது.
இன்னும் மூன்று மணி நேரம் பறக்க வேண்டும். பிறகு அணுகுண்டு களைக் கப்பலில் ஏற்றிவிடலாம். என் கைக்குப் பத்து இலட்சம் டாலர் வந்துவிடும்!

மறுநாள் காலை. காணாமல் போன விமானத்தைத் தேடி ஜேம்ஸ்பாண்ட் கிளம்பினார்.
பிலிக்ஸ்! விமானத்தைத் தாழ்வாக இறக்கு! அங்கே திமிங்கலங்கள் ஆர்ப்பரிக்கின்றன! அங்கே ஏதோ நடந்திருக்கிறது!
நான் கீழே குதிக்கிறேன்!
ஜேம்ஸ்பாண்ட் கடலில் குதித்து மூழ்கித் தேடினார். விமானத்தைக் கண்டுபிடித்தார்!
விமானத்தில் இருந்த அணுகுண்டுகளைக் காணோமே!
தகவல் கிடைத்ததும், அமெரிக்கப் போர்க் கப்பல் ஒன்று உடனே கிளம்பியது!
அணுகுண்டுகளை உடனே கண்டு பிடிக்காவிட்டால், உலகத்துக்கே ஆபத்து!
விமானம் கடலில் கிடப்பதால், ஏதாவது ஒரு கப்பலில்தான் அணுகுண்டுகளை ஏற்றி யிருப்பார்கள்.
எந்தக் கப்பல் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?
அணுகுண்டுகளை செலுத்த பகாமாவில்தான் ராக்கெட்டுத் தளம் இருக்கிறது. அங்குதான் அணுகுண்டுகளை கொண்டு போகக்கூடும்.
கப்பலை அங்கு செலுத்துங்கள்.

போர்க் கப்பல் விரைந்து சென்று பகாமாவை அடைந்தது.
கப்பலை எங்கே நிறுத்த?
மேற்கேபோகட்டும். அங்கேதான் ராக்கெட்டுத் தளம் இருக்கிறது.
தொலை நோக்கியில் பார்த்தார்கள்.
அதோ ராக்கெட்டு தளம். கப்பல் இங்கே நிற்கட்டும்.
கடலில் குதிக்கத் தயார் ஆனார்கள்.
நண்பர்களே! அணுகுண்டுகளிடம் இருந்து உலகத்தைக் காக்கும் ஓர் உயர்ந்த பணியில் இப்பொழுது நாம் ஈடுபட்டு இருக்கிறோம்.
நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று நிற்பதைக் கண்டார்கள்.
அந்தக் கப்பலில்தான் அணுகுண்டுகளைக் கடத்தி வந்திருக்கக்கூடும்.
இதற்குள் அணுகுண்டுகளை பதுக்கியிருக்கவும் கூடும். எப்படியும் கண்டுபிடித்து கைப்பற்ற வேண்டும்.

கடத்தல்காரர்கள்
அதோ போகிறார்கள்...
விடாதீர்கள்...
பிடியுங்கள்...
எட்டுக் கை மீன் ஒன்று ஜேம்ஸ்பாண்ட்டை பிடித்துக்கொண்டது!
கப்பலில் உள்ள மருத்துவமனையில் கட்டுகளுடன் ஜேம்ஸ்பாண்ட் படுத்திருந்தார்.
மீனுடன் போராடி, அதன் கைகளை வெட்டியதால் பிழைத்தீர்கள்!
அது இருக்கட்டும். அணுகுண்டுகள் கிடைத்தனவா?
இரண்டு அணுகுண்டுகளையும் கைப்பற்றிவிட்டோம். கடத்தியவர்களையும் பிடித்துவிட்டோம். கூட்டத் தலைவனைப் பிடிக்கப் பாரிசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறோம்.
எனக்கு இறக்கைகள் இருந்தால், இப்படியே பாரிசுக்குப் பறந்துவிடுவேன்!
கூடாது! இப்பொழுது உங்களுக்கு ஓய்வு தேவை!
ஓய்வா..., மீண்டும் தலைவலி வந்துவிடுமே!
(முடிந்தது)

கிட் கார்சன்

தோன்றும்

தங்கப் புதையல்

அமெரிக்காவில் ஒரு மலைத் தொடர். அந்த கரடு முரடான மலைப் பாதையில் வெள்ளையர்கள் வண்டியில் மேற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். அந்த மலையில் வாழும் செவ்விந்தியர்கள் அவர்களை பார்த்தார்கள்.

வேண்டாம் அப்பா. அவர்கள் உன்னைக் கொன்றுவிடுவார்கள்!
ஒரே குண்டில் உன்னைத் தீர்த்துவிடு வார்கள்.
நான் உயிருக்கு அஞ்சவில்லை.
என் கடமையைச் செய்ய வேண்டும்.
சாதாரண செவ்விந்தியன் போன்று உடையணிந்து வெள்ளை யர்களை காண, தலைவன் மலையில் இருந்து இறங்கி வந்தான்.
ஏய்! இட்! அங்கே பார்! ஒரு செவ்விந்தியன் வருகிறான்.
இன்று இரவு நாம் இங்கேயே தங்குவோம்.

கிட்கார்சன், வெள்ளையர்களுக்கு தலைமையேற்று நடத்தி வந்தார்.
யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?
நான் உங்களிடம் உறவு கொள்ள வந்திருக்கிறேன்.
தலைவன் அவர்களிடம் பாசாங்கு செய்தான்.
நீங்கள் நண்பர் களாக இருப்பீர்களா?
நீ நினைப்பது போன்று நாங்கள் சண்டைக்கு வரவில்லை.
ரொம்ப மகிழ்ச்சி. நான் போய் விட்டு பிறகு வருகிறேன்.
சரி. ஆனால், எங்களுக்கு தீங்கு செய்ய நினைக்காதே!

வெள்ளையர்கள் அந்த இடத்திலேயே முகாமிட்டு இரவு சாப்பாட்டை தயார் செய்தார்கள்.
விரைவாக அடுப்பை முடியுங்கள். வெளிச்சம் தெரிந்தால் நமக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடும்.
நடு இரவு. வெள்ளையர் கூட்டத்தில் இருந்த டேவிட்டும் நிக்சனும் ஒரு சதித்-திட்டம் தீட்டிக்கொண்டிருந்தார்கள்.
நிக்சன். இந்த முறை நிறைய தங்கத்தை கொள்ளையடிக்க வேண்டும்!
ஏய், அங்கே பார்! செவ்விந்தியன் வருகிறான்.
வாருங்கள் நண்பரே! எங்களுடன் சாப்பிடுங்கள்!

தலைவனுக்கு இருவரும் விருந்து கொடுத்தார்கள்.
நாம் ஒன்றாக இருந்தால், ஒரு பெரிய திட்டத்தை நிறைவேற்றலாம். நாங்கள் செவ்விந்தியர்களுக்காக நிறைய பொருள் கொண்டு வந்திருக்கிறோம். அதை எடுத்துக்கொண்டு காலையில் உங்கள் இடத்துக்கு வருகிறோம்.
ஏய், இந்த விளக்கை யார் இங்கே வைத்தது?
திடீரென்று கிட்கார்சன் வந்தார்.

ஏன் அந்த விளக்கை உதைக்கிறாய்?
நாம் இருக்கும் இடத்தில் ஒரு சிறு துளி வெளிச்சம் கூட தெரியக் கூடாது என்று சொன்னேன் அல்லவா?

சிகரெட்டு தீ கூட தெரியக் கூடாது.
தலைவன் புகைத்துக்கொண் டிருந்த சிகரெட்டுக் குழாயைக் கூட கிட் பிடுங்கி எறிந்தார்.
தலைவனுக்கு ஆத்திரம் பொங்கியது.
என்னை அவமானப் படுத்துகிறீர்கள்.
இங்கே எல்லாரும் என் கட்டளைக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும்.
நீங்கள் தவறாக நினைக்க வேண் டாம். அவனுக்கு செவ்விந்தியரைக் கண்டாலே பிடிக்காது.
இவனைப் பார்க்க சாதாரண செவ்விந்தி யனாகத் தெரியவில்லையே. பெரிய தலைவர் போல் அல்லவா தெரிகிறது.
மறுநாள் காலை—
நண்பர்களே! எல்லாரும் வண்டியில் ஏறுங்கள். புறப்படுவோம்.
கிட் தனது பயணத்தைத் தொடங்கினார்.

வண்டிகள் புறப்பட்டுச் சென்றன. ஆனால், ஒரு வண்டி மட்டும் மலைச் சரிவில் தனியாகப் போய்க்கொண்டிருந்தது.
என்ன இது? செவ்விந்தியன் டேவிட் வண்டியை எங்கே அழைத்துச் செல்கிறான்?
ஏய், ஜாக், நீ அவர்களை பாதுகாப்பாக அழைத்துச் செல். நான் இதோ அரை மணியில் வந்துவிடுகிறேன்.
ஓ.கே. கிட்!
அந்த வண்டியில் டேவிட்டும் நிக்சனும் இருந்தார்கள்.
நான் நினைத்தது சரிதான். அவர்கள் இருவரும் சதி செய்கிறார்கள். விடக்கூடாது.

அதே நேரம்— தலைவன் டேவிட்டையும் நிக்சனையும் தன் இடத்திற்கு அழைத்து வந்தான்.
இதுதான் எங்கள் இடம். இதோ இதுதான் எங்களின் கருவூல அறை.
உங்கள் இடம் மிகவும் அழகாக இருக்கிறதே!
டேவிட்டும் நிக்சனும் கருவூல அறையைக் கண்டதும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.


தலைவன் தனது உடையை அணிந்துகொண்டு, தன் கூட்டத்தாரிடம் வெள்ளையர்களை அறிமுகப்படுத்தினான்.
நண்பர்களே! இவர்கள் நமக்கு ஏராளமான பொருட்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.
பார்த்தாயா! இவன் தான் செவ்விந்தியர் களின் தலைவன். நம்மையே ஏமாற்றி யிருக்கிறான்.

டேவிட்டும் நிக்சனும் வண்டி யில் இருந்த ஒரு மூட்டை யைத் தூக்கி வந்தார்கள்.
இந்த பொருட்கள் அனைத்தும் உங்களுக் குத்தான். இனி நாம் நண்பர்களாக இருப்போம்.
இருவரும் மூட்டையை அவிழ்த்து பொருட்களை எடுத்துக் கொடுத்தார்கள்.
பொருட்களை கண்டதும் செவ்விந்தியர்கள் ஆச்சரி யத்தில் திக்குமுக்காடிப் போனார்கள்.
இதுதான் சமயம். வா! நமது வேலையைத் தொடங்கு வோம்.
இருவரும் கூட்டத்திலிருந்து மெதுவாக நழுவினார்கள்.

இருவரும் கருவூல அறைக்கு வந்தார்கள். அவர்களை தலைவனின் மகள் மோனா பார்த்தாள்.
இந்த வெள்ளையர் களுக்கு கருவூலத்தில் என்ன வேலை?
ஆ... எவ்வளவு தங்கம்! என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது!
இருவரும் மூட்டை கட்டிக் கொண்டார்கள்.
வா! போகலாம். இதுவே போதும்.
போதுமா? அறிவில்லாமல் பேசாதே!
கிடைப் பதை யாராவது வேண்டாம் என்று சொல் வார்களா? இதை வண்டியில் வைத்து விட்டு திரும்ப வருவோம்.
மறுமுறை வந்து, தங்கத்தை எடுத்தபோது மோனா உள்ளே வந்தாள்.
நில்லுங்கள்!
நினைத்தேன். இப்படி ஏதாவது நடக்கும் என்று.

திடீர் என்று மோனாவின் மீது பாய்ந்து அவள் வாயை பொத்தினான் டேவிட்.
ஏய், அவள் வாயில் துணியை அடை! இல்லாவிட்டால், கூச்சலிட்டு ஊரையே கூட்டிவிடுவாள்.
இவளை கடத்திக்கொண்டு போய் விடுவோம்!
அதுவும் சரிதான். ம்... வா, வண்டியில் ஏறு.
மோனாவை இழுத்து வந்து வண்டியில் தள்ளினார்கள். வண்டி சிட்டாகப் பறந்தது.
ஓடிவாருங்கள்! நமது கருவூலத்தைக் கொள்ளையடித்துப் போகிறார்கள்!
நிக்சன்! அவள் வாயை மூடடா!!

திடீரென்று தலைவன், ஓடிய வண்டியில் பாய்ந்து ஏறினான்.
மோனா, பயப்படாதே!
டேய்... ச்சீ. காட்டுமிராண்டியே! வண்டியை விடுடா.
அப்பா!
அதே நேரம்— கிட்கார்சன், டேவிட்டையும் நிக்சனையும் தேடி செவ்விந்தியர்களின் இருப்பிடத்திற்கு வந்தார்.
செவ்விந்தியர்கள் ஏன் கூச்சலிட்டு ஓடி வருகிறார்கள்? இங்கு ஏதோ நடந்திருக்கிறது!

ஏய், அதோ பார்! வெள்ளை நாய்!
அவனை சும்மா விடக் கூடாது.
கண்டந் துண்டமாக வெட்டிப் போடு!
குதிரையில் இருந்து கீழே இறங்கிய கிட், துப்பாக்கியை அவர்கள் முன் போட்டார்.
கொஞ்சம் பொறுங்கள்! என்ன நடந்தது?
அப்போது கூட்டத்தில் இருந்து அம்பு ஒன்று பாய்ந்து வந்து கிட்கார்சனின் காலடியில் குத்தி நின்றது.
வெள்ளை நாய்கள் கருவூலத்தைக் கொள்ளையடித்துப் போய்விட்டார்கள். எங்கள் தலைவர் அவர்களை விரட்டிப் போயிருக்கிறார்.

அப்படியா! அந்த துரோகிகளை பிடித்து, அவர்களை நான் தண்டிக்கிறேன். என்னை நம்புங்கள்.
வெள்ளை நாயே! இரட்டை வேடமா போடுகிறாய்?
நிறுத்து! அவனை ஒன்றும் செய்யாதே! அவன் மேல் தப்பில்லை.
டேவிட் டையும் நிக்சனையும் விரட்டிப் போன தலைவன் திரும்பி வந்தான். இருவரும் சேர்ந்து அவர்களை தேடிப் புறப்பட் டார்கள்.
அவர்களை நான் விடப்போவது இல்லை!
தலைவரே! நானும் உங்களுடன் வருகிறேன்!!
இருவரும் குதிரையில் ஏறி விரைந்தார்கள்.

வேறு பாதை எதுவும் இல்லையா?
இது குறுக்கு வழி. அவர்களை சுலபமாகப் பிடித்து விடலாம்.
அப்போது டேவிட்டின் வண்டி அந்த வழியாக வந்தது.
அதோ வண்டி போகிறது!
வண்டி மீது தாவுங்கள்.
இருவரும் குதிரையில் இருந்து வண்டி மீது தாவினார்கள்.
அழுத்தமாகப் பிடித்துக்கொள் ளுங்கள்.
நீங்கள் முன்னே போய் அவனை மடக்குங்கள்.
வண்டி நாலுகால் பாய்ச்சலில் ஓடியது.

டேய்! ராஸ்கல்! வண்டியை நிறுத்துடா!
அதே நேரம்– தலைவன் வண்டியின் பின்னால் இருந்து உள்ளே நுழைந்தான்.
அப்பா!
இதோடு நீ தொலைந்தாய்.
முன்னால் இருந்த டேவிட்டை கிட் வசமாகக் கவனித்தார்.
வண்டி கேட்பாரற்று, ஓடியது. நிக்சனை தலைவன் பிடித்து வைத்து நொறுக்கினான்.
தறிகெட்டு ஓடிய வண்டி ஓர் ஆற்றுக்குள் இறங்கியது.

ஆற்றுக்குள் இறங்கிய வண்டி அப்படியே சாய்ந்து விழுந்தது.
வண்டிக்குள் இருந்து வெளியேறிய மோனா தண்ணீரில் தத்தளித்தாள்.
அய்யோ! என்னை காப்பாற்றுங்கள். எனக்கு நீந்தத் தெரியாது!
மோனாவின் கூக்குரலைக் கேட்ட கிட் தண்ணீருக்குள் பாய்ந்தார்.
பயப்படாதே! இதோ நான் வருகிறேன்.
டேவிட்டையும் நிக்சனையும், தலைவன் கரைக்கு இழுத்து வந்தான்.
இனி பயமில்லை!
கிட் மோனாவை கரை சேர்த்தார்.

கிட்கார்சன்! நீங்கள்தான் என் உண்மையான நண்பன்.
தலைவன் அவர்களை கொல்லப் போனான்.
கிட்! தயவுசெய்து எங்களை காப்பாற்று!
இவர்களை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் இவர்களை சட்டத்தின் கையில் ஒப்ப டைத்து விடு கிறேன்.
உங்களுக்காக இவர்களை விடுகிறேன்.

நமது சந்திப்பு, வெள்ளையர்களுக்கும், செவ்விந்தியர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைப் பலப்படுத்தும் என்று நினைக்கிறேன்.
அப்படித்தான் நானும் ஆசைப்படுகிறேன். நாம் யாரும், யாருக்கும் எதிரிகள் இல்லை.
கிட்கார்சன், தன் கூட்டத்தை அழைத்துக்கொண்டு, தனது பயணத்தை மேற்கு நோக்கித் தொடர்ந்தார்.
திரும்பி வரும்பொழுது நான் உங்களை மீண்டும் சந்திக்கிறேன்.
ரொம்ப மகிழ்ச்சி. போய் வாருங்கள்!
(முடிந்தது)